26603

OL/2025(2026)/62/T-I, II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## குடியியற் கல்வி I

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ※ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

**1.** யாதேனும் ஒரு மோதலை கலந்துரையாடல் முறை மூலம் தீர்த்துக்கொள்ள முடியாதபோது பயன்படுத்தக்கூடிய மோதல் தீர்வு முறை
(1) பேச்சுவார்த்தை (2) பேரம் பேசும் முறை
(3) மீட்கும் முறை (4) தலையிடுதல்

**2.** நுகர்வுப் பொருள்களின் சோடி ஒன்றைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) உணவு, பசளை (2) ஆடையணிகள், மருந்துகள்
(3) தளபாடங்கள், இயந்திரங்கள் (4) கட்டடங்கள், வாகனங்கள்

**3.** பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தேர்தல் முறையீடுகளைப் பரிசீலிக்கும் அதிகாரத்தைக் கொண்ட நீதிமன்ற நிறுவகம் எது?
(1) உயர் நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

**4.** 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையின் பல பிரதேசங்களில் பாதிப்புகளை ஏற்படுத்திய சூறாவளியின் பெயர் யாது?
(1) டித்வா (2) டெக்ஸ்டர் (3) செபஸ்தியன் (4) பப்லோ

**5.** பல்வேறு மதங்கள், மொழிகள், இனங்கள் என்பவற்றுக்குரிய மக்கள் ஒன்றிணைந்து வாழுதல்
(1) பலினச் சமூகம் எனப்படும். (2) பல்மொழிச் சமூகம் எனப்படும்.
(3) பல் மதங்கள் சமூகம் எனப்படும். (4) பல்கலாசாரச் சமூகம் எனப்படும்.

**6.** தனிநபராக இவ்வுலகில் பிறந்தமை காரணமாக அனைத்து மக்களுக்கும் பொதுவாகக் கிடைக்கும் உரிமைகள் என்ன பெயரால் அழைக்கப்படும்?
(1) மனித உரிமைகள் (2) அரசியல் உரிமைகள்
(3) குடியியல் உரிமைகள் (4) மதம்சார் உரிமைகள்

**7.** பன்மைப் பண்பாட்டுச் சமூகம் ஒன்றின் நல்வாழ்வுக்கு முக்கியமான பண்பு
(1) தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் (2) சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல்
(3) பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல் (4) கூட்டுணர்வை விருத்திசெய்தல்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** தனிநபர் ஒருவரின் வாழ்க்கைக்கு அல்லது சொத்துகளுக்குத் தீங்கிழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் இலங்கையில் பிரயோகிக்கப்படும் சட்டம் யாது?
(1) குடியியல் சட்டம் (2) குற்றவியல் சட்டம்
(3) தண்டனைச் சட்டம் (4) தேசிய சட்டம்

**9.** பின்வரும் செயற்பாடுகளுள் சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பம் யாது?
(1) பாடசாலை செல்ல வேண்டிய வயதுடைய பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்
(2) பிள்ளைகளுக்கான ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்காதிருத்தல்
(3) பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருத்தல்
(4) பிள்ளைப் பருத்தில் மகிழ்ச்சியடைவதற்கான சந்தர்ப்பங்களை வழங்காதிருத்தல்

**10.** சட்டத்துறையின் மூலம் விதிக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவகம்
(1) உயர் நீதிமன்றம் (2) நிறைவேற்றுத்துறை
(3) பிரதம மந்திரியின் அலுவலகம் (4) பாராளுமன்றம்

**11.** பின்வருவனவற்றுள் மனிதனின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி எது?
(1) வளங்கள் எல்லையற்றதாகக் காணப்படல்
(2) வளங்கள் எல்லைக்குட்பட்டதாகக் காணப்படல்
(3) வளங்கள் பலதரப்பட்டவையாகக் காணப்படல்
(4) வளங்கள் உறுதியற்றதாகக் காணப்படல்

**12.** தற்போது இலங்கையர்களுக்கு அதிகளவிலான தொழிற் சந்தையை உருவாக்கியுள்ள நாடு எது?
(1) தென் கொரியா (2) இந்தியா (3) உக்ரைன் (4) அவுஸ்திரேலியா

**13.** பின்வருவோரில் தேர்தலின்போது மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைப்பதில் முக்கியமான கடமையைக் கொண்டிருப்பவர் யார்?
(1) ஜனாதிபதி (2) தேர்தல் ஆணையாளர் நாயகம்
(3) எதிர்க்கட்சித் தலைவர் (4) வாக்காளர்

**14.** சமஷ்டி அரசாங்க முறையில் அவதானிக்கக்கூடிய **விரும்பத்தகாத** பண்பு
(1) மத்திய அரசிலிருந்து பிராந்திய அரசுகள் பிரிவதற்கு முயற்சித்தல்
(2) ஜனநாயக ஆட்சிக் கோட்பாடுகளை வலுவடையச் செய்தல்
(3) நிர்வாகம்சார் தீர்மானங்கள் மேற்கொள்வதில் அதிகாரிகள் இல்லாதிருத்தல்
(4) எதேச்சாதிகாரமான அரச நிர்வாகத்துக்குத் தடை ஏற்படுத்தல்

**15.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கீழ் நாட்டை ஆட்சி செய்வதற்காக பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறை யாது?
(1) இனங்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப (2) சர்வசன வாக்குரிமையினால்
(3) ஆட்சியாளரின் விருப்புக்கு அமைவாக (4) அரசியல் கட்சிகளுக்கு அமைவாக

**16.** அரசு பற்றிக் குறிப்பிடப்படும் பின்வரும் கருத்துக்களிடையே **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அரசு என்பது நிலையான நிறுவகம் ஆகும்.
(2) அரசுக்கு நிலையான நிலப்பகுதி உண்டு.
(3) அரசு காலத்துக்குக் காலம் மாறக்கூடியது.
(4) அரசினுள் குறிப்பிடத்தக்க அளவு சனத்தொகை உண்டு.

**17.** முதலாளித்துவ சந்தைப் பண்புகளைப் பெருமளவில் காணக்கூடிய நாடுகளின் சோடி
(1) இந்தியா, வெனிசூலா (2) தென் கொரியா, வட கொரியா
(3) பெரிய பிரித்தானியா, ரஷ்யா (4) அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்

**18.** பாடசாலைச் சூழலில் முரண்பாடுகளை இழிவளவாக்குவதற்கு மாணவர்கள் மேற்கொள்ளக்கூடிய வினைத்திறனான படிமுறையாக அமைவது
(1) சகல மாணவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்
(2) பாடசாலையின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுதல்
(3) முரண்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது வகுப்பறையில் இருத்தல்
(4) முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பங்களை ஆசிரியர்களிடமிருந்து மறைத்தல்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**19.** நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பேணுவதற்கு உதவுவதில் குடிமக்கள் மத்திய அரசுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமையாவது
(1) பல்வேறு தீங்கு விளைவிக்கும் பொருள்களை சூழலுக்குள் விடுவிப்பதனைத் தவிர்த்தல்
(2) இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதில் பங்களிப்பு வழங்கல்
(3) பிரதேச அபிவிருத்தியில் ஈடுபாட்டுடன் பங்களிப்புச் செய்தல்
(4) இலஞ்சம், ஊழல், வீண் செலவு, மோசடி என்பவற்றை இல்லாதொழிப்பதற்குச் செயற்படுதல்

**20.** நாட்டின் நல்லாட்சியில் பொருளாதார தனித்துவத்துக்கு மதிப்பளிக்கும் படிமுறையாகக் கருதப்படுவது
(1) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துதல்
(2) தாம் விரும்பும் பிரதேசத்தில் வசித்தல்
(3) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
(4) பல்வேறு விழாக்களை ஒழுங்கமைத்தல்

**21.** சர்வதேச தொடர்புகளைப் பேணுவதன் மூலம் ஒரு நாடு பெறக்கூடிய நன்மை யாது?
(1) அரசின் வளங்களிலிருந்து உச்சபயன்களைப் பெறுதல்
(2) பல்கலாசாரக் கல்வியை நடைமுறைப்படுத்தல்
(3) மனித தேவைகளை நிறைவேற்றுவதற்கு இலகுவாகுதல்
(4) சக்திவாய்ந்த அரசுகளின் செல்வாக்கிலிருந்து பாதுகாக்கப்படுதல்

**22.** சூழல் தொகுதி உருவாக்கப்பட்டுள்ள கூறுகளிடையே பௌதிகச் சூழல் **அல்லாத** கூறு
(1) இயற்கைச் சூழல்
(2) உயிரியல் சூழல்
(3) சமூகச் சூழல்
(4) காலநிலைச் சூழல்

**23.** நீதித்துறையானது சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் உள்ளபோது ஏற்படக்கூடிய நன்மை
(1) மக்கள் சட்டத்தை மதித்து வாழ்வதற்குத் தூண்டப்படுவர்.
(2) நீதிபதிகள் இலகுவாகத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமானதாயிருக்கும்.
(3) மக்கள், சட்டத்தைப் பற்றி விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.
(4) தொழிலாளர், தொழில் வழங்குவோர் குழுக்களிடையே முரண்பாடுகள் குறைவடையும்.

**24.** முரண்பாடுகளைத் தீர்க்கும்போது இணக்கப்படுத்துநர் அதில் ஈடுபடுவது
(1) நீதிமன்றின் வேண்டுகோளுக்கிணங்க ஆகும்.
(2) பொலிஸாரின் வேண்டுகோளுக்கிணங்க ஆகும்.
(3) ஒரு தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க ஆகும்.
(4) நடுநிலையாளரின் வேண்டுகோளுக்கிணங்க ஆகும்.

**25.** பின்வரும் எந்தக் குழுவினரின் வருகையை இலங்கையில் பல்கலாசாரச் சமூகம் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்பாகக் கருதமுடியும்?
(1) விஜயன் உள்ளிட்ட குழுவினரின் வருகை
(2) காலிங்க மாகன் உள்ளிட்ட குழுவினரின் வருகை
(3) பண்டுவாசதேவன் உள்ளிட்ட குழுவினரதும் வருகை
(4) மகிந்த தேரர் உள்ளிட்ட குழுவினரின் வருகை

**26.** அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் சட்டங்களைக் கவனத்திற் கொண்டு, தேவையான சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பு உரித்தாவது
(1) நீதியமைச்சருக்காகும்.
(2) சட்டமா அதிபருக்காகும்.
(3) பிரதம நீதியரசருக்காகும்.
(4) ஒம்புட்ஸ்மனுக்காகும்.

**27.** அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணக்கூடிய பண்புகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) சிசு மரண விகிதம் அதிகரித்தல், தனிநபர் வருமானம் குறைவடைதல்
(2) தனிநபர் வருமானம் அதிகரித்தல், தொழில்நுட்பப் பாவனை குறைவடைதல்
(3) ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல், கணினி எழுத்தறிவு குறைவடைதல்
(4) நகர குடித்தொகை அதிகரித்தல், வெளிநாட்டுச் செலாவணி வருமானம் குறைவடைதல்

[பக். 4 ஐப் பார்க்க

28. பின்வரும் விடயங்களில் தொழிலாளர் உரிமை யாது?
(1) தொழில் வழங்குநர், தொழிலாளர் இடையே சிறந்த இடைத்தொடர்புகள் நிலவுதல்
(2) தொழிலாளர் உற்பத்தித்திறன் உயர்மட்டத்தில் பேணப்படுதல்
(3) ஊழியர் சேமலாப நிதியை இலாபம் ஈட்டும் வணிகங்களில் முதலீடு செய்தல்
(4) தொழிலாளர் நியாயமான சம்பளம் பெறுவதற்கான உரித்தைக் கொண்டிருத்தல்

29. பிரஜை ஒருவர் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணியைச் சரியாக நிறைவேற்றுவதற்காக உள்ள சட்டரீதியான பிணைப்பு
(1) பொறுப்பு எனப்படும். (2) கடமை எனப்படும்.
(3) அதிகாரம் எனப்படும். (4) பொறுப்புக்கூறல் எனப்படும்.

30. நல்லாட்சி முறையின் அடிப்படைப் பண்பு யாது?
(1) தாம் விரும்பிய தொழிலில் ஈடுபடுதல்
(2) தாம் விரும்பிய அரசியல் கொள்கையைக் கொண்டிருத்தல்
(3) வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுதல்
(4) பல்சமய நிகழ்ச்சிகளை அமுலாக்குதல்

31. பூகோளமயமாதலை எதிர்கொள்வதற்கு நிதிக் கொடுக்கல் வாங்கல்களை முறையாகப் பேணுவதற்கும் தடையற்ற வர்த்தகத்தை விரிவாக்கும் நோக்குடனும் தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு
(1) ஐரோப்பா சங்கம் (2) கொழும்புத் திட்டம்
(3) பிம்ஸ்ரெக் ஒழுங்கமைப்பு (4) யூனிசெப் ஒழுங்கமைப்பு

32. நாடுகளிடையே உத்தியோகபூர்வமாக தனி நபர்கள் மூலம் ஏற்படுத்தப்படும் இராஜதந்திர உறவுகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பாதுகாப்பு இராஜதந்திர தொடர்பு (2) அரச இராஜதந்திர தொடர்பு
(3) கலாசார இராஜதந்திர தொடர்பு (4) அரசியல் இராஜதந்திர தொடர்பு

33. பின்வருவனவற்றுள் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எடுக்கப்பட்ட முயற்சியாக அமைவது எது?
(1) பிரதேச சபைகளைத் தாபித்தல் (2) மாநகர சபைகளைத் தாபித்தல்
(3) மாவட்ட அபிவிருத்திச் சபைகளைத் தாபித்தல் (4) கிராம சபைகளைத் தாபித்தல்

34. பொது மக்களின் இறைமை அதிகாரத்துக்கு உரிய பகுதிகளைச் சரியாகக் குறிப்பிடும் தெரிவு யாது?
(1) ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்களிக்கும் உரிமை
(2) ஆட்சி அதிகாரம், நிறைவேற்றதிகாரம், மனித உரிமைகள்
(3) ஆட்சி அதிகாரம், திட்டமிடல், முகாமைத்துவம்
(4) ஆட்சி அதிகாரம், நீதிமன்ற அதிகாரம், நிர்வாக அதிகாரம்

35. பின்வருவனவற்றுள் சூழல் பற்றிய சரியான கருத்தைத் தரும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மனிதனால் உருவாக்கப்படுவதே சூழல் ஆகும்.
(2) சூழல், மனிதர்களின் கலாசார மரபுரிமை ஆகும்.
(3) சூழல் என்பது புவியில் வாழும் அனைத்து மனிதர்களுமாவர்.
(4) உயிரினமொன்றைச் சூழ நிலவும் பௌதிக நிலைமை சூழல் ஆகும்.

36. பின்வருவோரில் பாராளுமன்ற அரசாங்க முறையின் கீழ் அரசியல் நிறைவேற்றுத்துறையாகக் கருதப்படுபவர் யார் / கருதப்படுவது யாது?
(1) நிறைவேற்றதிகார ஜனாதிபதி
(2) பிரதம மந்திரி தலைமையிலான அமைச்சரவை
(3) சட்டவாக்கசபை
(4) மாகாண ஆளுநர்கள்

37. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் ஒன்றைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) சட்டத்தின் முன்னே ஒரு நபராக ஏற்றுக்கொள்ளப்படும் உரிமை உண்டு.
(2) சட்டத்தின் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் அத்தியாவசியமாகும்.
(3) தனிப்பட்ட இரகசியத்தன்மையைப் (privacy) பேணுவதற்கான உரிமை உண்டு.
(4) தனிநபருக்கு உரித்தான சொத்துகளை வலுக்கட்டாயமாக நீக்கமுடியாது.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**38.** 1989 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது விருப்பத்துக்குரிய மகாநாட்டின் முக்கிய நோக்கம் யாது?

(1) எந்தவொரு சமயத்தையும் வழிபடுவதற்கான சுதந்திரம் வழங்குதல்
(2) சொத்துகளை வைத்திருக்கும் உரிமை வழங்குதல்
(3) மரண தண்டனை வழங்குவதை நீக்குதல்
(4) வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கான உரிமை வழங்குதல்

**39.** பின்வரும் 'அ' நிரலில் சூழலின் பல்வேறு மாசடைதல்களும் 'ஆ' நிரலில் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. நீர் மாசடைதல் | A - மண் ஈரப்பதனை இழத்தல் |
| 2. பாறைக்கோளத்துக்குப் பாதிப்பு ஏற்படுதல் | B - கடல் மட்டம் உயர்வடைதல் |
| 3. காடழிப்பு | C - சூழல் அழகு அழிவடைதல் |
| 4. வளி மாசடைதல் | D - சமூக துர்நடத்தை அதிகரித்தல் |
| | E - நோய்கள் பரவுதல் |

'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரல் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) ABCD (2) BCDE (3) DEBA (4) ECAB

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - உரிய காலப்பகுதிக்குள் தேர்தல்கள் நடாத்தப்படுதல்
B - போட்டித் தன்மையுடைய கட்சி முறை காணப்படுதல்
C - போட்டித் தன்மையுடைய சந்தை முறை காணப்படுதல்
D - தொழிலாளர் பிரச்சினைகள் இணக்கப்பாட்டின் மூலம் தீர்க்கப்படுதல்
E - நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டிருத்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் ஜனநாயகப் பண்புகளை உள்ளடக்கிய கூற்றுகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?

(1) ABC (2) ABE (3) BCD (4) CDE

❊ ❊

PAST PAPERS WIKI

[பக். 6 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

## குடியியற் கல்வி II

* **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** (i) 2025 நவம்பர் மாதத்தில் சூறாவளியின் காரணமாக இலங்கையில் அதிக பாதிப்புகளுக்குட்பட்ட **இரண்டு** மாகாணங்கள் யாவை?

(ii) பிரசை ஒருவரால் சமூகத்துக்கு ஆற்றப்பட வேண்டிய **இரண்டு** ஒழுக்கவியல் கடமைகளைக் குறிப்பிடுக.

(iii) சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முறைமைக்கேற்ப அது பிரிக்கப்படக்கூடிய **இரண்டு** பகுதிகளும் யாவை?

(iv) சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதானமான **இரண்டு** சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

(v) மனித உரிமைகளை வகைப்படுத்தக்கூடிய **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(vi) அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் **இரண்டு** நவீன அளவீட்டுக் குறிகாட்டிகளைக் குறிப்பிடுக.

(vii) அரசு ஒன்றினால் நடைமுறைப்படுத்தக்கூடிய பல்வேறு அதிகார முறைகளில் **இரண்டினைத்** தருக.

(viii) பல்கலாசாரச் சமூகத்தில் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதனால் பெறக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(ix) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை நுகர்வோருக்குப் பகிர்ந்தளிப்பதில் பின்பற்றப்படும் **இரண்டு** முக்கியமான வர்த்தக முறைகளும் யாவை?

(x) ஐக்கிய நாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ள **இரண்டு** அமைப்புகளின் பெயர்களைத் தருக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** பொருளாதார முறைமை என்பது மனிதர்கள் எதிர்கொள்ளும் பிரதான பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் பல்வேறு சமூகங்கள் ஒழுங்கமைந்துள்ள விதம் ஆகும்.

(i) பொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** பிரதான நுட்பமுறைகளும் யாவை? (02 புள்ளிகள்)

(ii) மனித தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பயன்படுத்தப்படும் பொருளாதாரம் அல்லாத பொருள்கள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு சமூகங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள **இரண்டு** முறைகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட ஒரு முறையின் அடிப்படைப் பண்பொன்றைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**3.** முரண்பாடான நடத்தையுள்ள தனிநபர்கள் காரணமாக குடும்பத்தினுள் போன்று சமூகத்தினுள்ளும் மோதல் நிலைமைகள் உருவாகின்றன.

(i) தனிநபர்களுக்கு இடையில் ஏற்படும் பிழையான புரிந்துணர்வுகளின் விளைவாக ஏற்படக்கூடிய மனநிலைகளில் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) மோதலொன்று ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் அடிப்படைக் காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) இணக்கப்பாடு மூலம் தீர்க்கப்படக்கூடிய மோதல்களுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(b) இணக்கப்பாடு மூலம் முரண்பாடுகளைத் தீர்ப்பதனால் தனிநபர் பெறக்கூடிய நன்மை ஒன்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

**4.** நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பேணுவதுடன் சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புதலும் அரசொன்றின் பொறுப்பாகும்.

(i) இலங்கையில் நீதித்துறையில் காணக்கூடிய அதியுயர் நீதிசார் நிறுவகங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) மேல் நீதிமன்றம் மூலம் தீர்ப்பளிக்கப்படும் கடுமையான குற்றங்களாகக் கருதப்படும் **மூன்று** குற்றங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) நீதிமன்றத்தின் மூலம் நீதியைப் பெறுவதற்கு அதிக காலம், முயற்சி, பணம் என்பவற்றைச் செலவு செய்ய நேரிடுவதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பாதகமான விளைவுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு பிரஜை ஒருவர் மேற்கொள்ளக்கூடிய ஒரு செயற்பாட்டினைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

**5.** மனிதர்கள் ஒன்றுசேர்ந்து மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நடாத்தும் நோக்குடன் தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பே 'அரசு' என அழைக்கப்படுகிறது.

(i) அரசு ஒன்றில் காணக்கூடிய **இரண்டு** அடிப்படைப் பண்புகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) ஒரு அரசு நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள **மூன்று** பணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) அரசசொன்றின் பிரஜைகள் தொடர்பான பொறுப்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பொறுப்புக்கள் காரணமாக பிரஜையொருவருக்குக் கிடைக்கும் நன்மை ஒன்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

**6.** தனிநபர் வாழும் சுற்றுச்சூழல், அனைத்து உயிர்கள், அவற்றுக்கிடையில் நிலவும் இடைத்தொடர்புகள், அது நிலைத்திருப்பதற்குப் பங்களிக்கும் செயற்பாடுகள் என்பனவற்றைச் சூழல் என அழைக்கலாம்.

(i) இயற்கைச் சூழலுக்கு உரியவற்றுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ii) இயற்கை நிகழ்வுகளினால் பௌதிகச் சூழலுக்கு ஏற்படும் **மூன்று** பாதிப்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) மனித நடவடிக்கைகள் காரணமாக வளி மாசடையும் **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மனித நடவடிக்கைகள் காரணமாக சூழலுக்கு ஏற்படும் தீங்குகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு பிரஜையாக நீங்கள் மேற்கொள்ளக்கூடிய ஒரு செயற்பாட்டினைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

**7.** இனம், சாதி, மதம், மொழி, ஆண், பெண், சமூக வகுப்பு, அரசியல் கொள்கைகள் ஆகிய எதுவித வேறுபாடுகளையும் கவனத்திற் கொள்ளாது பொதுவாக அனைவரும் உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) பொருளாதார சமூக, கலாசார உரிமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்பட்ட விசேட நோக்கங்கள் **மூன்றினைத்** தருக. (03 புள்ளிகள்)

(iii) (a) சிரேஷ்ட பிரஜைகளின் (முதியோர்) நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள **இரண்டு** செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) உங்கள் குடும்பத்திலுள்ள முதியோரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு நீங்கள் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை ஒன்றைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

***